


# பெருங்குடல் புற்றுநோய்க்கான சிகிச்சையில் புரட்சி: அப்போலோ 5வது சர்வதேச பெருங்குடல் அறுவைசிகிச்சை கருத்தரங்கு

**சென்னை, செப். 1–**

**பெருங் குடல் அறுவை சிகிச்சை சம்பந்தமான சர்வதேச கருத்தரங்கை இந்தியாவின் முன்னணி மருத்துவமான அப்போலோ மருத்துவமனை அதன் ஐந்தாவது பதிப்பாக சென்னை ஹையாட் ரீஜென்சி ஓட்டலில் நடத்தியது நேற்று முன்தினம் துவங்கிய கருத்தரங்கு, இன்றோடு நிறைவு பெறுகிறது.**

அப்போலோ பெரும் குடல் புற்று நோய் (ஏ ஆர் சி) செயல் திட்டத்திலிருந்து படைத்திருக்கும் மருத்துவ விளைவுகள் ஆமணத்தின் வெளியீடு இக்கருத்தரங்கின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருக்கும்.' அப்போலோ புரோட்டான் கேன்சரின் ஏஆர்சிசெயல்திட்டம்பெருங்குடல் புற்றுநோய் அறுவைசிகிச்சையில் மிகச்சிறப்பானசிகிச்சைவிளைவுகளை சாத்திய மாக்கியிருக்கிறது. முக்கிய பிரிவுகளில் சர்வதேச தரநிலைகளையும் இச்சாதனை மிஞ்சியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெருங்குடல் புற்றுநோய் பாதிப்புள்ள நபர்களுக்கு நீண்டகால உயிர்பிழைப்பு விகிதம் என்ற உயர் செயல்திறனுக்கு இது பங்களிப்பை செய்திருக்கிறது.

அறுவை சிகிச்சை மையத்தின் கிளினிக்கல் லீட் பேராசிரியர் வெங்கடேஷ் முனிகிருஷ்ணன் கூறுகையில், ரோபோ அறுவை சிகிச்சைகளை தரநிலைப்படுத்தி யுள்ளோம். பெருங்குடல் புற்றுநோய்க்கான உலகின் மிகவும் செலவு குறைந்த ரோபோடிக் அறுவை சிகிச்சை திட்டத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். சராசரியாக, மேற்கத்திய நாடுகளில் இதேபோன்ற மருத்துவ செயல்முறைக்கு ஆகும் செலவில் 4ல் 1 பங்கு செலவில் அதே உயர்தர சிகிச்சையை நாங்கள் வழங்குகிறோம். அப்போலோ புரோட்டானின் ARC திட்டம்,பெருங்குடல் புற்றுநோய் சிகிச்சையில் நடப்பு நிலையை மாற்றியமைக்கும் ஆற்றல் கொண்டிருப்பதையும் மற்றும் நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிற அதன் மிகச்சிறப்பான விளைவுகளையும் நாங்கள் பார்த்திருக்கிறோம்." என்றார்.

துணைத் தலைவர் டாக்டர் ப்ரீத்தா ரெட்டி பேசுகையில், கூறியதாவது:–

"அப்போலோ சர்வதேச பெருங்குடல் அறுவைசிகிச்சை கருத்தரங்கு,உலகின் தலைசிறந்த நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பெருங்குடல் அறுவைசிகிச்சைமருத்துவர்களை ஓரிடத்தில் ஒன்றிணைக்கும் ஒரு முதன்மையான உலகளாவிய நிகழ்வாகும். இக்கருத்தரங்கம்,சிறந்த சிந்தனையாளர்களை ஒன்றுகூட்டுவதோடு நின்றுவிடுவதில்லை; குறிப்பாக இளம் அறுவைசிகிச்சை நிபுணர்களுக்கு இது ஒரு நிலை மாற்றத்தை உருவாக்கும் சிறந்த கற்றல் அனுபவமாகும்.

இந்தியாவில் இதற்கு முன்பு இருந்திராத ஒரு நடவடிக்கையாக, வளர்ந்து வரும் திறமைசாலிகள் இந்த அறிவுச் செல்வத்தை தடையின்றி பெறுவதை உறுதிசெய்யும் வகையில், கருத்தரங்கிற்கான வருகைப்பதிவை இலவசமாக மாற்றியுள்ளோம். எங்கள் ARC திட்டம், தொடர்ந்து விதிவிலக்கான மருத்துவ விளைவுகளை அளித்து, பல முக்கியமான பகுதிகளில் உலகளாவிய அளவுகோல்களை விஞ்சியிருக்கிறது.

இந்தியாவில் முதன்முறையாக, அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் கருத்தரங்கில் பங்கேற்பை கட்டணமில்லாத இலவசமானதாக ஆக்கியிருக்கிறது. இது, இளம் அறுவைசிகிச்சை நிபுணர்கள் நிதி பிரச்சனைகள் இல்லாமல் உயர்தரக் கற்றலில் கவனம் செலுத்த வகை செய்கிறது.



எழுத்தாளர் லட்சுமி நடராஜனின் காற்றின் மொழி மற்றும் நான் பேச நினைப்பதெல்லாம் பாகம் 2 என்ற நூலினை விஜிபி நிறுவன தலைவர் டாக்டர் விஜி சந்தோஷம் வெளியிட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் டாக்டர் கோ விசயராகவன் பெற்றுக் கொண்டார் அருகில் திருவள்ளுவர் விருத்தாளர் அனைத்திந்திய எழுத்தாளர் சங்கத் தலைவர் கோ பெரியண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு கோவில் தொழிலாளர்கள் யூனியன் எழும்பூர் – திரு.வி.க நகர் கிளை நிர்வாகிகள் கூட்டம்

**சென்னை, செப். 1–**

**தமிழ்நாடு கோவில் தொழிலாளர்கள் யூனியன் சென்னை கோட்டத்தின் எழும்பூர் – திரு.வி.க நகர் கிளையின் புதிய நிர்வாகிகள் நியமனம் குறித்தான ஆலோசனை கூட்டம் சூளை கந்தன் தெருவில் உள்ள சீனிவாச பெருமாள் திருக்கோயிலில் வளாகத்தில் கிளை கௌரவத் தலைவர் ஜனார்த்தனம் தலைமையில் நடைபெற்றது.**



இந்த ஆலோசனை கூட்டத்திற்கு கௌரவத் தலைவர் வேலாயுதம், சென்னை கோட்டத் தலைவர் எஸ்.தனசேகர், செயலாளர் இரா. ரமேஷ், கொள்கை பரப்பு செயலாளர் க.வெங்கடேசன், பொருளாளர் து.தனசேகர் மற்றும் மாநில மகளிர் அணி செயலாளர் செந்தமிழ்ச்செல்வி உயர்மட்ட குழு உறுப்பினர் அ.முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டு கிளையின் செயல்பாடுகள், சங்கத்தின் வளர்ச்சி பணிகள், புதிய நிர்வாகிகள் தேர்வு குறித்து நிர்வாகிகளிடையே ஆலோசனை மேற்கொண்டு கிளை நிர்வாகிகளின் ஒப்புதலோடு மாற்றி அமைத்தனர்

அதன்படி எழும்பூர் – திரு.வி.க நகர் கிளை புதிய நிர்வாகிகளாக : கௌரவ தலைவராக டி.ஜெனார்தனம், தலைவராக, எக்மோர் என். சக்திவேல், செயலாளராக ஜெயகுமார், பொருளாளராக எல்.கலைவேந்தன், அமைப்பாளராக சு.கார்த்திகேயன், கொள்கை பரப்பு செயலாளராக சூலை எஸ்.சங்கர், மகளிரணி செயலாளராக ஆர்.தீபா, துணைத் தலைவர்களாக த.சுரேஷ்குமார், புரசைவாக்கம் அசோக், துணைச் செயலாளர்களாக டி.குருபிரகாஷ், பலராமன், துணை அமைப்பாளர்களாக சந்தோஷ், மகேந்திரன், மணிமேகலை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர், அவர்களுக்கு சென்னை கோட்ட நிர்வாகிகள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும் இக்கூட்டத்தில் கோயில் பணியாளர்களை முழு நேர அரசு ஊழியர்களாக்க வேண்டும், அரசு பணியாளர்கள் போன்று கோயிலில் உழைக்கும் தற்காலிக தொகுப்பூதிய பெண் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு தர வேண்டும் கோயில் அருகிலேயே பணியாளர் குடியிருப்பு கட்டி தர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இறுதியில் கிளை அமைப்பாளர் கார்த்திக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



சென்னை அடையார் இந்திராநகரில் கடந்த 46ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இந்திராநகர் ஐயப்பா பக்தஜனசபா சங்கத்தின் தலைவர் எஸ். கல்யாணசுந்தரம், செயலாளர் டாக்டர் கே.கே. கிருஷ்ணன்குட்டி ஆகியோர்களின் ஆலோசனைப்படி கேரளா வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு சம்பவத்திற்கு நிவாரணநிதியாக தங்களது சங்கத்தின் சார்பில் காசோலையை தூதரகத்தின் சிறப்பு அதிகாரி அனுபிசாக்கோவிடம் சங்கத்தைச்சேர்ந்த கே.சக்திமணிகண்டன், ஆர்.இதயச்சந்திரன், என்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வழங்கினர்.

# முழு மதியைக் கண்ட கடல் அலை போல அரங்கை ஆர்ப்பரிக்க வைத்த பாக்யஸ்ரீயின் சிஷ்யை நேயா

சென்னை, செப். 1–

சென்னையில் பாக்யஸ்ரீ சதீஷ் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி வரும் ஓம் நிருத்தியக்ஷேத்ரா நாட்டியப் பள்ளியின் மாணவி நேயா செந்தில்குமார். இவரது அரங்கேற்றம் மயிலை ஆர் ஆர் சபாவில் நடந்தது.

பிரபல நாட்டியக் கலைஞரும், பாலா நாட்டிய மஞ்சரி ட்ரஸ்டின் நிறுவனருமான பேராசிரியர் சிக்கில் வசந்தகுமாரி, தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார், மக்கள் குரல் வீ. ராம்ஜீ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று குருவையும், சிஷ்யையும் மனம் திறந்து பாராட்டினார்கள்.



அலாரிப்பு, சரஸ்வதி கவுத்துவம் (குஞ்சிதபாதம் பிள்ளை), ஜதீஸ்வரம் (டாக்டர் பத்மா சுப்ரமணியம்), தில்லை சப்தம் (அருணாச்சலம் பிள்ளை), ''இன்னும் என் மனம்.. ''வர்ணம் (லால்குடி ஜெயராமன்), ''யாதுமாகி நின்றாய் காளி''... பதம் (மகாகவி பாரதியார்), என்னை நீ மறவாதே கீர்த்தனம் (தண்டபாணி தேசிகர்), தில்லானா ( சுவாதி திருநாள்), குறத்தி (டெல்லி கிருஷ்ணமூர்த்தி) ஆகிய 11 உருப்படிகளில் 140 நிமிடம் பார்வையாளர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தார் நேயா.

நட்டுவாங்கம் பாக்யஸ்ரீ சதீஷ், வாய்ப்பாட்டு : ஜனனி ஹம்சினி நரசிம்மன், மிருதங்கம் டாக்டர் ஜி விஜயராகவன், வயலின் டாக்டர் எஸ் விஜயராகவன், புல்லாங்குழல் தேவராஜ், சிறப்பு சத்தம் கிருஷ்ணன் ஆகிய ஐவர் கூட்டணி நேயாவின் நாட்டியத்தை இன்னும் ஒரு படி மேலே உயர்த்தி உச்சிக்கொட்டி ரசிக்க வைத்தது. (மறக்கவே முடியாத ஐவர் கூட்டணி. பழனி பஞ்சாமிர்தம் ருசி எப்படியோ அப்படியே தித்திக்கும்).

சிருங்காரத்திலிருந்து சாந்தம் வரை காட்டிய நவரசத்தில்...

இடது கால் தரையில் பதித்து, வலது காலை கண்ணிமைக்கும் நேரத்தில் தோள்பட்டை உயரத்திற்கு உயர்த்தி, கால் கட்டை விரலை கைவிரல் கொண்டு பிடித்து நின்ற அந்தப் பத்து நொடி நின்ற தாண்டவத்தில்...

யாதுமாகி நின்றாய் காளி... இளமை துள்ளலில்... "என்னை நீ மறவாதே ..." நெகிழ வைக்கும் பாடலில்...

''இன்னும் என்னை அறியாதவர் போல''... வர்ணத்தில் – இப்படி 5 உருப்படிகளில்

முழுமதி கண்ட கடல் அலை போல ஆர்ப்பரித்தோம், குளிர் மழையில் நனையும் இளம் பயிர் போல சிலிர்த்தோம்.

குட்டிக் கண்ணன் வெண்ணை திருடுவதும், அதை உருட்டி உருட்டி வாயில் போட்டு விழுங்குவதும், உண்டி வில்லால் கோபியர் தலையில் சுமக்கும் தயிர் பானையை உடைப்பதும், நதியில் நீராடும் கோபியர்களின் வஸ்திரத்தை திருடி மரக்கிளை மேலே உட்கார்ந்து வேணு கானம் இசைப்பதும்... நேயாவின் ஒவ்வொரு அசைவும் பாவமும் பார்வையாளர்களின் புருவம் உயர்த்தும். குரு பாக்யஸ்ரீக்கு பேர் சொல்லும். பார்வையை நேயா மீதிருந்து எடுக்க மறந்தோமே?!

குறத்தியின் அந்த குதியாட்டத்தில் மனசு பறிபோனது என்றால்... நேயாவின் ஆட்டத்திற்கு ஆதார சுருதியே பாக்யஸ்ரீ தான். அது, இறைவன் கொடுத்த வரம், நேயாவுக்கு! மாணிக்கவாசகரின் பாடலோடு நிகழ்வு நிறைவு, பக்தி மணத்தோடு நடக்க வைத்தார் நேயா.

வந்திருந்தவர்களை பெற்றோர்கள் செந்தில்குமார் மது சகோதரன் ஆதித்யா வரவேற்றார்கள்.

## 82 வயதில் ஆட வரும் சிக்கல் வசந்தகுமாரி

60 வயது நெருங்கிய வைதேகிக்கு பயிற்சி கொடுத்து அரங்கேற்றி நாட்டியக்

கலைஞர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியவர் பாக்யஸ்ரீ. அந்நாள் நாட்டிய கலைஞர். ஆடிஆடிக் களைத்த கால்கள் பல ஆண்டுகள் ஓய்வெடுத்திருக்கும் நிலையில் மீண்டும் ஆட வேண்டும்... என்ற தணியாத தாகத்தில் இருப்பவர் – சிக்கல் வசந்தகுமாரி. அவருக்கு பயிற்சி கொடுத்து, 82 வயதிலும் அவரை ஆட வைக்கும் உத்தேசத்தில் களம் இறங்கி இருக்கிறார். (சிக்கலின் கனவு சிக்கல் இல்லாமல் ஆகப்போகிறது நினைவு. சிக்கலும் – செய்திருக்கிறதே – பாக்யம்?! வாவ்...)


# JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN:L51102TZ1982PLC029253

பதிவு அலுவலகம்: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு, இந்தியா 641006 மொபைல் எண்:7395922291/92
மின்னஞ்சல்: investor@jmjfintechltd.com இணையதளம்: www.jmjfintechltd.com

## 41வது வருடாந்திர பொதுக்கூட்டம், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு

இந்திய அரசின் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தினால் ('எம்சிஏ') வழங்கப்பட்ட பொது சுற்றறிக்கைகள் மற்றும் செக்யூரிடிஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவின் ('செபி') பொருந்தக்கூடிய விதிகளின்படி, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனி உறுப்பினர்களின் 41வது வருடாந்திர பொதுக்கூட்டம் 23 செப்டம்பர், 2024 திங்கட்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு காணொளி காட்சி/இதர ஒளி ஒலி சாதனங்கள் மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க மற்றும் காகித நகல்களை அனுப்புவதில் உள்ள சிரமங்கள் காரணமாக, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2023–24 நிதியாண்டுக்கான ஆண்டு அறிக்கையின் மின்னணு நகல்கள் கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அனுப்பி வைக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 41வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2023–24 நிதியாண்டுக்கான ஆண்டு அறிக்கை ஆகியவை கம்பெனியின் வலைதளம் www.jmjfintechltd.com, ஸ்டாக் எக்சேஞ் வலைதளம் மற்றும் டெபாசிட்டரி வலைதளத்தில் உள்ளது. இந்த ஆவணங்களை www.jmjfintechltd.com மற்றும் பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். 41வது ஆண்டு பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையை அனுப்புவது ஆகஸ்ட் 31, 2024 அன்று நிறைவடைந்தது.

டிமெட்டரியலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களைத் தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் தொடர்புடைய டெபாசிட்டரியில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் M/s பூர்வா ஷரிஜிஸ்ட்ரி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிடம் (இனி ''ஆர்டிஏ'' என்று குறிப்பிடப்படும்'') வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் அதன் உறுப்பினர்கள் வாக்களிக்க தொலைதூர மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதியை நிறுவனம் வழங்கும். கூடுதலாக, வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை கம்பெனி வழங்குகிறது. விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, 17 செப்டம்பர், 2024 முதல் திங்கட்கிழமை, 23 செப்டம்பர் 2024 முடிய (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்று கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91 விதிகளின்படி மேலும் அறிவிக்கப்படுகிறது.

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20ன்படி, உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளிக்கிறது. கட் ஆப் தேதியான திங்கட்கிழமை, 16 செப்டம்பர் 2024 அன்று காகித வடிவில் அல்லது டிமெட்டரியலைஸ்ட் வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து வேறு இடத்தில் இருந்தாலும் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) சிடிஎஸ்எல்–ல் உள்ள மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் 41வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் தங்கள் வாக்குகளை அளிக்கலாம்.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பதாவது:

i. 41வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் செயல்படுத்தப்படும்.
ii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 20 செப்டம்பர் 2024 அன்று (காலை 9.00 மணி) தொடங்கும்.
iii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 22 செப்டம்பர் 2024 அன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது.
iv. மின்னணு வாக்குப்பதிவிற்கு தகுதியானவர்களை நிர்ணயிக்கும் கட் ஆப் தேதி புதன்கிழமை, 16 செப்டம்பர் 2024. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியான திங்கட்கிழமை, 16 செப்டம்பர் 2024 அன்று பங்குகளை வைத்துள்ளவர் purvashr@mtnl.net.inக்கு மின்னஞ்சல் அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே பதிவு செய்த நபர் அவரது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.
v. கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட தேவையான விவரங்களை அளித்து ஆண்டறிக்கை, மின்னணு வாக்குப்பதிவிற்கான லாகின் மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம்.

i) காகித வடிவில் வைத்துள்ள பங்குதாரர்களுக்கு: தயவுசெய்து போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்கு சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல் அட்டை) போன்ற தேவையான தகவல்களை மின்னஞ்சல் மூலம் கம்பெனிக்கு investor@jmjfintechltd.com அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் purvashr@mtnl.net.inக்கு அளிக்க வேண்டும்.

ii) டிமேட் பங்குதாரர்களுக்கு: தயவுசெய்து டிமேட் கணக்கு விவரங்களை (CDSL–16–digit beneficiary ID or NSDL–16–digit DPID + CLID), பெயர், கிளையன்ட் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை கம்பெனிக்கு investor@jmjfintechltd.comக்கு அல்லது உங்கள் அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளருக்கு (DP) அளிக்க வேண்டும்.

எனினும், மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே பதிவு செய்த நபர் அவரது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராவது மற்றும் சிடிஎஸ்எல் மின்–வாக்களிப்பு முறையிலிருந்து மின்வாக்கெடுப்பில் கலந்து கொள்வது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால், helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் எழுதலாம்.

vi. வாக்களிக்க தகுதி உள்ள உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது.
எ) ஞாயிற்றுக்கிழமை, 22 செப்டம்பர் 2024 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.
பி) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது மற்றும்
சி) கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளரின் பதிவேட்டில் பதிவு செய்த ஒரு நபர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெற தகுதியுடையவர் ஆவார்.
டி) ஒரு உறுப்பினர் இரு முறைகளிலும் வாக்களித்தால், மின்னணு வாக்குப்பதிவின் மூலம் செய்யப்படும் வாக்களிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது அளித்த மின்வாக்களிப்பு செல்லாது என்று கருதப்படும்.
vii) வாக்குப்பதிவு மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெறுவதை ஆராய Ms. லட்சுமி சுப்ரமணியன், சீனியர் பார்ட்னர், M/s. லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், அலுவலகம், ''முருகேச நாயக்கர் காம்ப்ளக்ஸ்'', எண். 81, கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006 அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.
viii) மின்னணு வாக்குப்பதிவு முடிவுகளை கம்பெனி தனது வலைதளம் www.jmjfintechltd.com மற்றும் www.bseindia.comல் பங்குச் சந்தைக்கும் அறிவிக்கும்.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– திரு. ஜோஜு மடத்தும்பாடி ஜானி
நிர்வாக இயக்குனர்
DIN: 02712125

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 01.09.2024